எடுக்கப்பட்டு வருவதும் அமைச்சருக்குத் தெரியும். இவற்றை யெல்லாம் நிறைவேற்றவே பற்றாக்குறை இருப்பதால், தண்ணீர் கொள்ளளவு அதிகப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டம் பற்றிச்சொல்லியிருக்கிறார்கள். ஆளியாறு அதிலே ஒரு பகுதியாக இருந்து கொண்டு இருக்கிறது. பரம்பிக் குளம்-ஆளியாறு பாசன வசதிக்கு திட்டமிடும்போதே, 2½ லட்சம் ஏக்கர் என்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே இருந்த அரசு, அதற்குப் பின்னாடி வந்த இந்த அரசும் பாசன வசதியை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, 1 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும் வகையில் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று திட்டமிட்டு, அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளியாறு கொள்ளளவு ஏறத் தாழ 3,864 மில்லியன் கனஅடியாகும். ஒரு வருஷத்திற்கு ஏறத்தாழ 7 மில்லியன் கன அடி தண்ணீர் அங்கே ரோந்து முறையில் நிறுத்தப்படுகிறது. அதன் மூலமாகப் பாசன வசதி பெறும் அளவிலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மீண்டும் உயர்த்துகிற எண்ணம் இந்த அரசின் ஆய்வில் இல்லை.

பாவனர் வடிகால் திட்டம்.

*வினா எண் 377—திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பாவனர் வடிகால் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் சிபாரிசு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை செயல்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு, துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த பாவனர் வடிகால் திட்டம் சிதம்பரம் வட்டத்தில் மிகவும் முக்கிய மான வடிகால் திட்டமாகும். முன்பொரு வடிகால் திட்டம் 7 கோடி ரூபாய் அளவிற்குப் போடப்பட்டு, அது நேராகக் கடலில் கலப்பதற்கு வகைசெய்யப்பட்டது. அந்தத் திட்டம் ஆராயப் பட்டு வருகிறதா? இப்போது ஒரு மாற்றுத் திட்டம் அமைத்து இருப்பதாகத் தெரிகிறது. அதாவது தற்போது பெருமாள் ஏரியில்

1979 மார்ச் 13]

இருந்து வடியக்கூடிய தண்ணீர், 4 அடி பள்ளத்தில் உடனடியாக விழுந்து பரவனாறு வழியாக வடிகிறது. அதை பெருமாள் ஏரியின் வடக்குப் பகுதியில் வடிமுனை அமைத்து கடலில் கலக்கும் வகையில் செய்ய ஒரு திட்டம் புதியதாகத் தயாரிக்கப் பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தின் விவரம் என்ன? அதைப் பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் துரை கலியமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிற அந்தத் திட்டம் அரசின் பரிசீலனைக்கு இன்னும் வரவில்லை. அவர்கள் விவரமாகத் தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய பதிலைச் சொல்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

* வினா எண் 378—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பலமான தலைக்காயங்களுக்கு சிகிச்சையளிக்க விசேஷ பிரிவு இல்லாதது உண்மையா?

(ஆ) ஆம் எனில், கோவை நகரில் இம்மருத்துவ மனையில் இப்பிரிவு (Neurology Department) ஏற்படுத்த ஆலோசனை உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, விடை ஆம்; தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். அவர் சொன்ன பதில் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே கோயம்புத்தூர் மருத்துவ மனையில் தலைக்கு ஏற்படும் காயங்களுக்கு ஒரு நல்ல வார்டு தயார் செய்து, 32 படுக்கைகள் தயார் செய்து, எக்ஸ்ரே மெஷின் வாங்கி வைத்து, ஸ்டாப் சாங்ஷன் ஆகாததால், டாக்டர்கள் மற்றவர்கள் சேவை செய்யாமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதை தொடங்குவதற்கு ஸ்டாப் சாங்ஷன் உடனடியாகச் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். பிறகு, இரண்டுக்கும் சேர்த்து துணைக்கேள்விகள் போடலாம்.